**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (29.8.2011) சட்டமன்றப் பேரவையில், திரு க. பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு அளித்த பதில்**

ஆற்றின் குறுக்கே, நிலத்தடி நீரை செறிவூட்டவும், நீர் இருப்பைக் கூட்டவும், தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. கம்பரசன்பேட்டை கிராமம், முத்தரசநல்லூர் அருகே ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களின் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகர குடிநீர் திட்டம் ஆகியவற்றிற்கு நிலத்தடி நீர் எடுக்கப்படுவதால், காவேரி ஆற்றுப்படுகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, இந்தப் பகுதிகளில் குடிநீர் மற்றும் விவசாயம் ஆகியவற்றுக்கு பிரச்சனை ஏற்படுகிறது. இவற்றைத் தடுத்து, கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு, வருடம் முழுவதும் நீர் கிடைக்கவும், காவேரிப்படுகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, கிணறுகளில் நீர் மட்டம் உயரவும், நீரின் தன்மை மேம்படவும், வழி வகை செய்யும் வகையில், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசன்பேட்டை கிராமம், முத்தரசநல்லூர் அருகே 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பணை, 1.5 மீட்டர் உயரம் தான் இருக்கும். எனவே, இதன் மூலம், கரைப் பகுதிகளுக்கு எந்த வித சேதமும் ஏற்படாது.

கதவணை என்பது, பாசனத்திற்காக தண்ணீரை மாற்றி விடுவதற்கான அமைப்பு ஆகும். இதற்கு சுமார் 200 கோடி ரூபாய் செலவு ஏற்படும். ஆனால், தற்போது, தடுப்பணை கட்டப்படும் இடத்தில் இருந்து, நீர்ப்பாசனத்தை பெருக்குவதற்கு வழி வகை எதுவும் இல்லை. தற்போது, உத்தேசிக்கப்பட்டுள்ள தடுப்பணை, நிலத்தடி நீர் மேம்பாட்டிற்கும், குடிநீர் திட்டங்களுக்கு ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கச் செய்வதற்கு மட்டும் தான் பயன்படும்.

எனவே, கதவணை கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.